# கோவிட்-19/COVID-19

வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான புதிய செய்தி

Toronto Community Housing

**ஏப்பிரல் 6, 2020**

## கோவிட்-19 கிருமி பரவுவதைக் கட்டுப்படுத்த உங்களை நீங்களே தனிமைப்படுத்துங்கள்

பொதுசன ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் கோவிட்-19 கிருமித் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தவும் முக்கியமான ஒரு வழி சுயமாக மக்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்துவது ஆகும்.

கட்டாயமாக நீங்கள் 14 நாட்களுக்கு உங்கள் வீட்டில் தங்கி இருந்து உங்களை நீங்களே தனிமைப்படுத்தல் பின்வரும் நிலைமைகளின் கீழ் அவசியம் என்று அறியுங்கள்:

- உங்களுக்கு கோவிட்-19 நோய் இருப்பதாக மருத்துவ ரீதியாக உறுதி செய்யப்பட்டு உள்ளது.
- உங்களுக்கு கோவிட்-19 நோயின் அடையாளங்களும் அறிகுறிகளும் உள்ளன.
- உங்களுக்குச் செய்யப்பட்ட கோவிட்-19 நோய்ப் பரிசோதனை முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்.
- கனடாவுக்கு வெளியே பிரயாணம் செய்து சமீபத்தில் நீங்கள் இந்த நாட்டுக்கு திரும்பி வந்து இருக்கிறீர்கள்.

நீங்கள் 70 வயதுக்கு மேற்பட்ட ஒருவராக இருப்பதுடன், உங்களுடைய நோயெதிர்ப்பு உடல்திறன் தொகுதி பலவீனமாக உள்ளது அல்லது உங்களுக்கு மருத்துவ ரீதியாகப் பிரச்சினை நிலைமை ஒன்று இருக்கிறது என்றால், நீங்கள் வீட்டில் இருந்து கொள்ள வேண்டும் என்று உறுதியாக ஆலோசனை கூறப்படுகிறது.

நீங்கள் உங்கள் வீட்டிலேயே தங்கி விடுவது, விருந்தாளிகள் உங்கள் வீட்டுக்கு வருவதை கட்டுப்படுத்துவது, மற்றவர்களுடன் நெருக்கமாகப் பழகுவதைத் தவிர்ப்பது, முதியோர் மற்றும் நோயெதிர்ப்பு உடல்திறன் தொகுதி பலவீனம் அடைந்தவர்கள் அல்லது மருத்துவ ரீதியாக ஒரு பிரச்சினை நிலை உடையவர்கள் ஆகியோரிடம் இருந்து தூர விலகி நிற்பது போன்ற இவை யாவும் சுயமாகத் தனிமைப்படுத்தல் என்ற செயலில் அடங்கும்.

தங்களைத் தாங்களே சுயமாகத் தனிமைப்படுத்தும் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு ரொறொன்ரோ சமூக வீட்டுவாரியம் ஆதார உதவிகளை வழங்குகிறது. உதவி கோர விரும்பினால் எந்த நேரத்திலும் சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்துடன்(Client Care Centre) **416-981-5500** தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சல் அனுப்புங்கள்: help@torontohousing.ca

எமது குடியிருப்புச் சமூகங்களையும் இந்த மாநகரத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் உங்கள் பங்களிப்புக்கு நாம் நன்றி கூறுகிறோம். மேலதிக தகவலினை நீங்கள் torontohousing.ca/covid-19 என்ற எமது வலையத்தளத்தில் காணுங்கள்.

இந்த அறிவிப்பினை வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் பெறுவதற்கு அழையுங்கள்
**416-981-5500.**